காலை முரசு

பக்கங்கள் 20

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 23 சனிக்கிழமை 09.09.2023 அதிர்வு 39

ஈஸ்டர் தாக்குதல், தேசிய பாதுகாப்பு:

## நாடாளுமன்றத்தில் 2 நாள்கள் விவாதம்

இலங்கையில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் நாடாளுமன் றத்தில் இரண்டு நாள்கள் 05▶

# சுகாதார அமைச்சருக்கு எதிரான பிரேரணை தோற்கடிப்பு



(சுடர் திலீபன்)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நேற்று தோற்கடிக்கப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியால் கொண்டுவரப்பட்ட இந்தப் பிரே ரணை 40 மேலதிக வாக்குகளால் தோற் கடிக்கப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 73 வாக்குக ளும், எதிராக 113 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் 04▶

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின்

# பிரதான சூத்திரதாரிகளைக் கைது செய்து சர்வதேச விசாரணைக்கு உட்படுத்துங்கள்!

## ‘சனல் 4’ ஆவணப்படம் தொடர்பில் சம்பந்தன் வெளிப்படைக் கருத்து

- உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்
- பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க வேண்டும்



(சீ.ஏ.தமிழ்மாறன்)

“இலங்கையில் 2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினத்தில் இடம்பெற்ற தாக்குதலின் பிரதான சூத்திரதா ரிகள் எனச் ‘சனல் 4’ ஆவணப்படத்தில் குற்றஞ்சாட்டப்பட் டுள்ள சந்தேகநபர்கள் உடனடியாகக் கைது 04▶

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று

# இரண்டு பெண் போராளிகளின் எச்சங்கள் முழுமையாக மீட்பு





- ஆடைகளில் இலக்கங்கள்
- துப்பாக்கி ரவைகளும் சிக்கின

(சுடர் திலீபன்)

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தன. நேற்றைய அகழ்வாய்வுகள் 04▶

# இரத்தத்தின் மேல் ஆட்சியமைத்த கோட்டாபயவும் பிள்ளையானும்!!

## அவர்கள் இருவருக்கும் கடும் தண்டனை வேண்டும் என்கிறார் சாணக்கியன் எம்.பி.



(சுடர் திலீபன்)

“கிறிஸ்தவ மக்களையும் பச்சிளம் குழந்தைகளையும் கொன்று அவர்களின் இரத்தத்தின் மேல் ஆட்சியமைத்த கோட்டாபய ராஜபக்ஷவும் மற்றும் பிள்ளையானும் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். 04▶

## இரகசியம்



‘ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’ என்பார்கள்.

‘சனல்-4’ காணொலியால் நாடு அல்லோலகல்லோலப் பட்டிருக்கின்றது. அந்தக் காணொலியால் யாருக்கு லாபம்? 08▶



# தும்புத் தொழிற்சாலை தீயில் எரிந்து நாசமானது!

## கிளிநொச்சியில் நேற்றுச் சம்பவம்

கிளிநொச்சி பகுதியில் உள்ள தும்புத் தொழிற்சாலையில் நேற்று வெள்ளிக் கிழமை நண்பகல் ஏற்பட்ட திடீர்த் தீயினால் தொழிற்சாலை எரிந்து நாச மாகியுள்ளது.

மேலும் தொழிற்சாலை வளாகத்தி லுள்ள தென்னை மரங்களும், அருகி லுள்ள காணிகளில் உள்ள தென்னை மரங்களும் தீயில் எரிந்து நாசமாகி யுள்ளன.

சம்பவ இடத்திற்கு சென்ற தீயணைப் புப் பிரிவினர், இராணுவத்தினர், கிராம மக்கள் ஆகியோரின் துணையுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

கிராமக் குடியிருப்புகளுக்குள் தீ பரவாத வகையில் அதனைக் கட்டுப் படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டன.

எனினும், தும்புத் தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# அம்பாறைக் கரையோரங்களை காவு கொள்கின்றது கடலரிப்பு

## சாய்ந்தமருதில் வாசிகசாலை மதில் வீழ்ந்தது

(அ.அஸ்வர்)

சாய்ந்தமருது மர்ஹூம் மீராசாஹிப் ஞாபகார்த்த மீனவர் வாசிகசாலையின் பின்பக்க சுற்றுமதில் கடலரிப்புக்குட்பட்டு இடிந்து வீழ்ந்துள்ளது.

அண்மைக்காலமாக அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பாரிய கடலரிப்புக்கு உள்ளாகி வரு கின்றன.

இதனால் கரையோரங்களிலிருந்த பல கட்டடங்கள், மைதானங்கள், மீனவர் வாடிகள் மற்றும் பெருந்தொகையான தென்னை மரங்களும் அழிந்து நாசமாகியுள்ளன.



இந்நிலையில் சாய்ந்தமருது கடற் கரை வீதியில் மிகவும் சிறப்பாக இயங்கி வந்த மீனவர் வாசிகசாலையின் சுற்று மதிலின் ஒரு பகுதியும் பாரிய கடல் அலைகளால் காவுகொள்ளப்பட்டுள்ளது. கடலரிப்பின் தாக்கம் மேலும் அதிகரிக் குமாயின் வாசிகசாலைக் கட்டடம் உட்பட அருகிலுள்ள குடியிருப்புகளும் பாதிக்கப்படலாம் என மக்கள் அச்சம் கொள்கின்றனர்.

இதேவேளை இவ் வாசிகசாலையை அடுத்தள்ள தலைவர் அஷ்ரப் ஞாப கார்த்த பூங்காவின் சுற்றுமதிலும் அண் மையில் கடலரிப்புக்கு உள்ளாகி இடிந்த வீழ்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதனால் இப்பகுதியில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் பாரிய கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோருகின்றனர்.

# பத்து அமைச்சுகளின் செலவினங்களை பகுப்பாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானம்

அதிகளவான நிதி ஒதுக்கீடு செய்யப் படும் பத்து அமைச்சுகளின் செலவினங் களை பகுப்பாய்வு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடை பெற்ற தேசிய கல்விக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான கட்டமைப்பை வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார். அது தொடர்பான அறிக்கைகள் மூன்று மொழிகளிலும் நாடாளுமன்றத் திடம் சமர்ப்பிக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதன்போது குறிப்பிட்டுள்ளார்.




# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் பெண் போராளிகளின் எச்சங்கள் நேற்று மீட்பு

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்தபோது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பெண் போராளிகளின் மனித எச்சங்கள் இரண்டு முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.












# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## பிரதான...

செய்யப்பட வேண்டும். அவர்கள் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்."

– இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

அந்த மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக இற்றை வரையிலும் என்ன விசாரணை நடந்தது? என்ன முன்னேற்றம் நடந்தது? என்று எவருக்கும் தெரியாமல் உள்ளது.

அந்தத் தாக்குதல் சம்பந்தமாகப் பல சந்தேகத்துக்குரிய விடயங்கள் வெளிவந்திருக்கின்றன.

2019 ஆம் ஆண்டில் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கவே அந்தத் தாக்குதல் ஒரு தரப்பால் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது என்ற பொதுவான கருத்து நிலவுகின்றது.

இதைத்தான் 'சனல் 4' தொலைக்காட்சி பல ஆதாரங்களுடன் சர்வதேசத்துக்குப் படம் பிடித்துக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தும் பல தரப்பினராலும் தற்போது முன்வைக்கப்பட்டு வருகின்றது.

உள்நாட்டில் நடைபெற்ற விசாரணைகளில் எந்தவித முன்னேற்றமும் இல்லாதபடியால் சர்வதேச விசாரணை வேண்டுமெனப் பல தரப்பினரும் வலியுறுத்துவது ஒரு நியாயமான கோரிக்கை.

இந்தக் கருமத்தில் சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள், ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு அடங்கிய சர்வதேச சமூகம் மிகவும் அக்கறை செலுத்த வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சந்தேகநபர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும். அவர்கள் சர்வதேச விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்." – என்றார்.

## இரண்டு பெண்...

முல்லைத்தீவு நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் தொல்லியல்துறை சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

இந்த மூன்றாம் நாள் அகழ்வாய்வின் போது தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் பெண் போராளிகளின் மனித எச்சங்கள் இரண்டு முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டன.

அந்த மனித எச்சங்களுடன் மீட்கப்பட்ட பெண்களின் உள்ளாடைகளிலும், பச்சை நிற முழு நீள காற்சட்டைகளிலும் இலக்கங்கள் இடப்பட்டிருந்தன. அத்தோடு அந்த மனித எச்சங்கள் இரண்டிலும் துப்பாக்கி ரவைகள் இருந்துள்ளமையையும் அவதானிக்க முடிந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த அகழ்வுப் பணியில் இணைந்திருந்த சட்டத்தரணிகளுள் ஒருவரான கே.எஸ்.நிரஞ்சன் கருத்துத் தெரிவிக்கையில்,

"ஏற்கனவே இனங்காணப்பட்ட மனித மனித எச்சங்களில், இரண்டு மனித உடல்களின் மனித எச்சங்கள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அவ்வாறு அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்கள் இரண்டும், விடுதலைப்புலிகள் அமைப்பின்பெண்போராளிகளுடையதாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அத்தோடு அகழ்வாய்வில் எடுக்கப்பட்ட ஆடைகளில் இலக்கங்கள் இடப்பட்டுள்ளன.

அதற்கமைய முதலாவது மனித எச்சத்தின் பச்சை நிற நீளக் காற்சட்டையில் 3204 என்ற இலக்கமும், முழு நீளக் கையுடைய மேற்சட்டையும், 3174 என்ற இலக்கமுடைய பெண்களின் உள்ளாடையும், மார்புக் கச்சையும் எடுக்கப்பட்டன.

தொடர்ந்து இரண்டாவது மனித எச்சம் அகழ்ந்தெடுக்கப்பட்டது. அதிலும் பச்சை நிற முழு நீளக் காற்சட்டையும், முழு நீளக் கையுடைய மேற்சட்டையும், 1564 இலக்கமுடைய உள்ளாடையும், மார்புக் கச்சையும் எடுக்கப்பட்டது

அதேவேளை, அகழ்ந்தெடுக்கப்பட்ட இரு மனித எச்சங்களிலும் துப்பாக்கி ரவைகள் இருந்ததை அவதானிக்க முடிந்தது.

ஆடைகளில் இலக்கங்கள் மாத்திரமே பொறிக்கப்பட்டுள்ளன. அந்த இலக்கங்கள் கறுப்பு நிறத்திலான நூலினாலேயே ஆடைகளில் பொறிக்கப்பட்டுள்ளன." – என்றார்.

நேற்று அகழ்வுப் பணி இடம்பெற்ற இடத்தில் தொல்லியல் ஆய்வாளர் பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம், யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி, சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள், தடயவியல் பொலிஸார், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் இராமலிங்கம் சத்தியசீலன், சமூகச் செயற்பாட்டாளர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், கொக்குத்தொடுவாய் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் கி.சிவகுரு ஆகியோர் பிரசன்னமகியிருந்தனர்.

குறித்த மனிதப் புதைகுழி வளாகத்தில் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

அகழ்ந்தெடுக்கப்பட்ட மனித எச்சங்களும், தடயப் பொருட்களும் பொதி யிடப்பட்டு, சட்ட வைத்திய அதிகாரியால் பகுப்பாய்வுகளுக்காக எடுத்துச் செல்லப்பட்டன.

## சுகாதார...

வைத்தியர் காவிந்த ஜயவர்த்தன கடந்த புதன்கிழமை சபையில் முன்வைத்திருந்தார்.

மருந்துத் தட்டுப்பாடு, தரமற்ற மருந்துக் கொள்வனவு, மருத்துவ சிகிச்சையின் போதான மரணங்கள், பாதிப்புக்கள் உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப் படுத்தி சுகாதாரத்துறை அமைச்சருக்கு எதிராக இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்பட்டிருந்தது.

இந்தப் பிரேரணை மீது கடந்த புதன்கிழமை தொடக்கம் நேற்று வரை தொடர்ந்து 3 நாள்கள் விவாதம் இடம்பெற்றது. நேற்று மாலை 5.35 மணிக்கு விவாதம் முடிவுக்கு வந்தது.

இதன்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையைச் சபை அனுமதிக்கின்றதா எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன கேட்டபோது, எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல வாக்களிப்பு வேண்டுமெனக் கோரினார். அதன் பிரகாரம் மாலை 5.40 மணிக்கு இலத்திரனியல் முறையில் வாக்கெடுப்பு நடைபெற்றது.

பிரேரணைக்கு ஆதரவாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி., தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் எம்.பிக்களும், சுயாதீன எதிரணி எம்.பிக்களும் என 73 பேர் வாக்களித்தனர்.

அதேவேளை, நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக அரச தரப்பான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவினருடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள், சுயாதீன எதிரணி எம்.பிக்களான நிமல் லான்சா, ஏ.எல்.எம். அதாவுல்லா மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி என 113 பேர் வாக்களித்தனர்.

இதன்பிரகாரம் சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை 40 மேலதிக வாக்குகளால் அரசு தோற்கடித்தது.

இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் 38 பேர் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இரத்தத்தின்

அவர்கள் இருவரையும் உடனடியாகக் கைது செய்து சிறையில் அடையுங்கள்."

– இவ்வாறு சபையில் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களுக்காகவும், உரிமைக்காகவும் பல உண்மைகளை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்களான சசி புண்ணியமூர்த்தி, நிலாந்தன், கிருஷ்ணா போன்றவர்கள் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தங்களது ஊடகக் கடமையைச் செய்து வருகின்றனர்.

இன்றும் அந்த ஊடகவியலாளர்கள் இந்தப் பிள்ளையான் போன்றவர்களால் அச்சுறுத்தப்பட்டு வருகின்றமையுடன் அவர்களுடைய உயிர்களுக்கு ஆபத்தும், உத்தரவாதம் இல்லாத நிலையும் காணப்படுகின்றது.

ஊடகங்களுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் இந்த நிலை என்றால் எங்களுக்கும் பயமாக இருக்கின்றது. காரணம் நானும் மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்.

கோட்டாபய ராஜபக்ஷவுடன் சேர்ந்து இயங்கிய திரிபோலி ப்ரோட்டன் குழுவைப் பாவித்து எங்களையும் கொலை செய்வார்களா என்ற அச்சம் எமக்கு உண்டு." – என்றார்.

# சுகாதார அமைச்சுக்கு கெஹலிய தகுதியற்றவர்

## சிறிதரன் நேற்று சபையில் கடும் சாடல்



கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சு பதவிக்கு தகுதியற்றவர் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது எஸ்.சிறிதரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் சுகாதார கட்டமைப்பு மிக மோசமான நெருக்கடிக்குள் தள்ளப் பட்டுள்ளது. சுகாதார சேவை அடிப்படை மனித உரிமைக்குள் ஏன் உள்வாங் கப்படவில்லை?

பிரித்தானியா உள்ளிட்ட முன்னேற் றமடைந்துள்ள நாடுகளில் சுகாதார சேவை அடிப்படை மனித உரிமையாக காணப்படுகிறது. இலங்கையில் சுகா தார அமைச்சு ஒரு வியாபார களமாகக் காணப்படுகிறது.

நாட்டில் சுகாதார தரப்பில் ஒரு சாரார் இலவச சுகாதார சேவையை வர்த்தக மாபியாகவே பயன்படுத்துகிறார்கள். இதனால் தான் இலங்கையின் சுகாதார துறை இன்று கேள்விக்குள்ளாக் கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகங்கள் வருடாந்தம் பல வைத்தியர்களையும், தாதிகளையும் உருவாக்குகிறது. ஆனால் பெரும்பாலா னோர் நாட்டை விட்டுச் செல்கிறார்கள்.

மருத்துவ துறையில் தாதியர் இணைப்பில் தமிழ் சமூகத்தினர் புறக்கணிக்கப்படுகிறார்கள். சிங்களவர்களுக்கான நியமனத்தின் போது வேண்டுமாயின் சட்டங்களும் திருத்தம் செய்யப்படும்.

தமிழர்கள் திட்டமிட்டு தவிர்க்கப் படுகிறார்கள். இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தாதியர் சேவையில் பாரிய பற்றாக்குறை காணப்படுகிறது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொள்ள நாளாந்தம் 420 பேர் வருகிறார்கள்.

மறுபுறம் பல இலட்சக்கணக்கானோர் மாதாந்தம் சிகிச்சை பெறுகிறார்கள். ஆனால் அந்த வைத்தியசாலையில் அடிப்படை வசதிகள் கூட இல்லை. இது பாரியதொரு பிரச்சினையாகும்.

நாட்டின் சுகாதாரத்துறை பாதிக் கப்பட்டுள்ளது. பொது மக்கள் பாதிக் கப்பட்டுள்ளார்கள் என நாங்கள் குறிப் பிட்டுக் கொண்டிருக்கும் போது சுகா தாரத்துறை அமைச்சர் பொறுப்பற்ற வகையில் நீங்கள் பேசுவதை பேசுங்கள், நாங்கள் இவ்வாறு தான் இருப்போம் என்ற நினைப்பில் அவர் உள்ளார். இவ்வாறான தகுதியற்ற அமைச்சர் நீக்கப்பட வேண்டும் அல்லவா?

கேவலமான ஒருவரே இந்த நாட்டில் சுகாதார அமைச்சராக உள்ளார். இவ்வாறானவரை வைத்துக் கொண்டு எவ்வாறு சுகாதாரத்துறையை மேம்படுத்த முடியும்.? இவர் சுகாதார அமைச்சு பதவிக்கு தகுதியற்றவர். ஆகவே சுகாதார அமைச்சருக்கு எதி ரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம். - என்று தெரிவித்தார்.

# வெட்டு காயங்களுடன் ஆணின் சடலம் மீட்பு

## வெல்லவாயவில் சம்பவம்

வெல்லவாய பொலிஸ் பிரிவிற் குட்பட்ட கங்பங்குவ பகுதியில் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள் ளார்.

வீடொன்றுக்குள் வெட்டுக்காயங்க ளுடன் ஒருவர் உயிரிழந்துள்ளார் என வழங்கப்பட்ட தகவலுக்கமைய சடலம் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

33 வயதான ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபர் தனது தாய் மற்றும் சகோதரிகளுடன் வசித்து வந்துள்ளார். இந்த நிலையில், வீட்டில் எவரும் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் மதுபோதைக்கு அடிமையான ஒருவர் எனவும், அயல் வீட்டாருடன் மோதலில் ஈடுபட்டு வந் துள்ளார் என்றும் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

இந்தக் கொலை தொடர்பில் இது வரை எவரும் கைது செய்யப்படவில்லை.

வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வரு கின்றனர்.

## நாடாளுமன்றத்தில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் நடைபெறவுள்ளது.

பாநாயகர் மஹிந்த யாப்பா அபே வர்த்தன தலைமையில் நேற்று நடைபெற்ற நாடாளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழுக் கூட் டத்திலேயே இந்த முடிவு எடுக்கப் பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 21 மற்றும் 22 ஆம் திகதிகளில் விவாதம் நடத்த நாள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேர ணையை எதிரணி கொண்டுவர வுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## இலங்கைக் கட்டமைப்புகளின் சீத்துவம்

இலங்கையில், உள்நாட்டில் இடம்பெற்ற விவகாரத்துக்கு சர்வதேச விசாரணையைக் கோருவது - இலங்கை நீதித்துறை விசாரிக்கக் கூடிய விடயத்தை சர்வதேச தரப்பு இங்கு மேற்கொள்ள அனுமதிப்பது - இலங்கையின் இறைமையை அவமதிக்கும் நடவடிக்கை என்று விமர்சித்த தென்னிலங்கை அரசியல்வாதிகள் இப்போது தாங்களே அத்தகைய விடயத்திற்கு சர்வதேச விசாரணையைக் கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

பிரச்சினை தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் என்று இனரீதியாகத் துருவமயப்பட்டு இருக்கும்போது, தமிழர்களுக்கு நீதி கிடைத்து விடக்கூடாது என்பதற்காக, சிங்களப் பேரினவாதம் ஒன்றுபட்டு நின்று, அப்படி இறைமையின் பெயரால் 'நடிப்பு சுதேசி'களாக செயற்பட்டது. தமிழருக்கு நீதி கிடைத்துவிடும் என்பதிலும் பார்க்க, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் உண்மை முகம் - கொடூர பண்பியல்பு - குரூரப்போக்கு - சர்வதேச ரீதியில் அம்பலமாகிவிடும், அதை அனுமதிக்கக் கூடாது என்பதற்காகத்தான் இந்த இறைமைத் தத்துவ வியாக்கியானம்.

ஆனால், இப்போது சர்ச்சை சிங்கள கட்சிகளுக்கு இடையில். ஒரு தரப்பு ஆட்சிக் கட்டு வருவதற்காக அதே சிங்களத்தின் இராணுவம் புகுந்து விளையாடி இருக்கின்றது என்பது குற்றச்சாட்டு. ஆட்சிக்கட்டில் இருக்கும் தரப்புக்கும்,ஆட்சி கட்டுக்கு வர துடிக்கும் தரப்புக்கும் இடையிலான சர்ச்சையில் குண்டு வெடிப்பு விவகாரம். அதனால்தான் இவ்வாறு சர்வதேச விசாரணைக்கான அழுத்தம் அவற்றில் ஒரு தரப்பில் இருந்து வருகின்றது.

இந்த விடயத்தில் எல்லாம் இறைமையாவது, குப்பையாவது! அதையெல்லாம் விட்டுவிட்டுத்தான் சர்வதேச விசாரணைக்கான அழைப்பு எதிர்க்கட்சி தலைவராலும் அவர் பக்கத்தில் உள்ளவர்களாலும் விடுக்கப்படுகின்றது. ஆளும் தரப்பில் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அதை ஏற்கலாம் என்று பச்சைக்கொடி வேறு காட்டி இருக்கின்றார்.

யுத்தகாலத்தில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவும் கூட இப்போது இந்த ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பான சர்ச்சைக்கு சர்வதேச விசாரணைக்கு அழைப்பு விடுக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பில் சர்வதேச விசாரணை நடத்தப்படுமானால் சரத் பொன்சேகாவின் கதியும் அதோ கதிதான் என்பதும் அவருக்கே தெரியும்.

அதனால்தான் ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு சர்வதேச நீதி விசாரணையைக் கோரும் அவர், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் அதே விசாரணைப் பொறிமுறையை அழைப்பதற்கு ஆதரவு தெரிவிக்கின்றார் இல்லை.

சரியோ, பிழையோ 'சனல் - 4' காணொலி இலங்கையின் அரச கட்டமைப்பு முறைமையை மாத்திரமல்ல, விசாரணை - புலனாய்வு முறைமைகள், நீதித்துறை போன்ற பல முக்கிய துறையின் சுதந்திர செயற்பாட்டையும் நடுநிலைத் தன்மையையும் கேள்விக்கு உள்ளாக்கி விட்டது என்பது மட்டும் உண்மை.



## கனேடிய துணைத் தூதுவர் யாழ். பல்கலைக்கு விஜயம்

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அரசியல் மற்றும் வர்த்தக விவகாரங்களுக்கான துணைத்தூதுவர் டானியல் பூட் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தார்.

துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவுடன் சமகால விவகாரங்கள் மற்றும் கனேடிய அரசாங்கத்தின் நிதியீட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் குறித்து அவர் விரிவாகக் கலந்துரையாடினார். அத்துடன் பல்கலைக் கழகத்தின் சமுதாயச் சமையலறை மற்றும் நூலகம் ஆகிய பகுதிகளுக்கும் நேரில் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டார்.

## மாணவனுக்குப் பாராட்டு

(எம்.எப். நவாஸ் )



கடந்த 2022 ஆம் ஆண்டு க. பொ. த. உயர் தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் அக்கரைப்பற்று ஸ்ரீ இராம கிருஷ்ணா கல்லூரி மாணவன் பரமானந்தம் தரணிதரன் மருத்துவத்துறைக்கு தெரிவாகியுள்ளார்.

இவரைப் பாடசாலைச் சமூகம் பாராட்டியுள்ளது.

இவர் உயர்தர பரீட்சையில் மூன்று 'ஏ' சித்தியும் பொது ஆங்கிலத்தில் 'பி' சித்தியும் பெற்றுள்ளார்.






## திருவிழாத் திருப்பலி...

முல்லைத்தீவு துணுக்காய் ஆரோக்கியபுரம் ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருவிழாத் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நேற்று (07) நடைபெற்றன.

முல்லைதீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேசத்துக்கு உட்பட்ட ஆரோக்கியபுரம் கிராமத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் வருடாந்த திருநாள் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் நேற்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றன. இதில் ஆலயத்தின் பங்குத் தந்தை, பங்கு மக்கள், பங்கு தந்தையர்கள், திருக்குடும்ப கன்னியர்கள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

# நல்லூரான் 19 ஆம் நாள் உற்சவ வீதியுலா

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் திருவிழா 19ஆம்நாள் மாலை உற்சவம் நேற்று இடம்பெற்றது. வள்ளி, தெய்வானை சமேதராக முருகப்பெருமான் வீதியுலாவந்தார்.

(படங்கள் :- பிரபாகரன் டிலக்சன்)













# சர்வதேச விசாரணைக்கு ஜனாதிபதி ரணில் தயார்

## ஆளும் - எதிர்த் தரப்பு முரண்பட்டால் உண்மையை கண்டுபிடிக்க முடியாது என்கிறார் நீதி அமைச்சர்

“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணைகளை முன்னெடுக்கத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ள போதும் ஒரு தரப்பினர் அதற்குச் சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. ஈஸ்டர் குண்டுத் தாக்குல் சம்பவத்தில் ஆளும், எதிர்த் தரப்பினர் முரண்பட்டுக் கொண்டால் ஒருபோதும் உண்மையைக் கண்டு பிடிக்க முடியாது. எனவே, ஆளும் - எதிர்த் தரப்பினர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.”

இவ்வாறு நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் ஆளும் மற்றும் எதிர்த் தரப்பினர் முரண்பட்டுக்கொண்டால் ஒருபோதும் தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியாது .

குண்டுத் தாக்குதலால் நாட்டு மக்கள் அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.



குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம் பெறுவதற்கு முன்னர் நான் ஒரு தரப்பினரால் இனவாதியாகவும், இரத்தத்தைக் காண்பதற்கு ஆசை கொண்டுள்ள நபர் என்றும் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன்.

நல்லாட்சி அரசின்போது நீதி அமைச்சர் பதவியில் இருந்துகொண்டு அடிப்படைவாதம் தொடர்பில் நான் நாடாளுமன்றத்தில் உரையாற்றினேன்.

அதன் பின்னர் நான் கடுமையாக விமர்சிக்கப்பட்டேன். எமது அரசின் உறுப்பினர்களே என்னை விமர்சித்தார்கள். ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மாத்திரமே சிறந்த முறையில் செயற்பட்டார்.

நீதி அமைச்சர் குறிப்பிட்ட விடயத்தை அலட்சியப்படுத்தக் கூடாது. உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என ரவூப் ஹக்கீம் மாத்திரமே நடுநிலையுடன் கருத்துத் தெரிவித்தார்.

ஆனால், எந்த நடவடிக்கையும் அப்போது எடுக்கப்படவில்லை. என்னை விமர்சிப்பதை மாத்திரமே இலக்காகக் கொண்டு அப்போதைய அரசு செயற்பட்டது. இறுதியில் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது.

குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சர்வதேச மட்டத்தில் விசாரணைகளை முன்னெடுக்கத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

ஆனால், அதற்கு உரிய தரப்பினர் சாதகமான நிலைப்பாட்டைத் தெரிவிக்கவில்லை. ஆகவே, குண்டுத்தாக்குதல் ஆளும் மற்றும் எதிர்க் கட்சியின் பிரச்சினையில்லை. அன்று தடுக்கக் கூடிய அழிவைத் தடுக்காத காரணத்தால்தான் பலர் உயிரிழந்தார்கள். ஆகவே, இந்த விடயத்தில் நாடாளுமன்றம் பொறுப்புடன் செயற்பட வேண்டும்.” - என்றார்.

# ஓட்டமாவடி விபத்தில் சிறுமி பலி; தந்தை படுகாயம்

ஓட்டமாவடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளம்சியுடன் அவரது தந்தை பலத்த காயம் அடைந்துள்ளார்.

இந்த விபத்தானது ஓட்டமாவடி பாலத்துக்கு அருகில் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பொலன்னறுவை பகுதியில் இருந்து வந்த பஸ் ஒன்றுடன் தந்தையும் மகளும் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் சிறுமி அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த தந்தை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காவத்தமுனை அல் அமீன் வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் பாத்திமா றியா என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார். காயமடைந்த தந்தை காவத்தமுனை, பனிச்சையடி வீதியைச் சேர்ந்த 35 வயதுடைய அப்துல் கபூர் முகம்மட் கலீ என்பவர் எனத் தெரியவந்துள்ளது.

## இரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தரப்புக்கும், எதிர்க்கட்சிகள் தரப்புக்கும் ஆட்டம் காட்டியபடி தனது அதிகாரத்தைக் கொண்டு நடத்தும் நாட்டின் கூத்தாடிக்குத்தான் – ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான் – நல்ல கொண்டாட்டம்.

அவரை எப்படியும் தமது கூட்டிலிருந்து வெளியே போக விடாமல் – தனித்துச் சென்று விடாமல் – தங்களின் உரிமைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய இக்கட்டை ஆளும் தரப்பினருக்கு – குறிப்பாக மொட்டுக் கட்சியினருக்கு – ஏற்படுத்திக் கொடுத்து விட்டது ‘சனல்–4’ என்ற மன வருத்தம் மொட்டுக் கட்சிப் பிரமுகர்கள் சிலருக்கு என்பதை தெற்கு ஊடக வட்டாரங்கள் மூலம் அறிய முடிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முரண்பட்டு, அவரைத் தங்கள் அரசுக் கூட்டுக்கு வெளியே விட்டு விட்டால், ‘சனல்–4’ விவகாரம் கொண்டு வந்துள்ள பூதத்தை தமக்கான துரும்பாக ரணில் விக்கிரமசிங்க பயன்படுத்திவிடலாம், சர்வதேச விசாரணைக்கு அழைப்பு என் பது உட்பட மோசமான நடவடிக்கை எத னையும் அவர் எடுத்து விட்டால் மொட்டுக் கட்சியும் ராஜபக்ஷக்களும் இனி நிமிர்வது மிகக் கஷ்டமாக இருக்கும் என்று அந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டின.

எப்படிப் பார்த்தாலும் விவகாரத்தை தமக்குச் சாதகமான எந்த வழியிலும் திருப்பி, அரசியல் செய்வதற்கான வாய்ப்பை ‘சனல்–4’ காணொலி ரணிலுக்கு வழங்கி இருக்கின்றது என்பது தெளிவு.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மை ஆதரிக்காமல், வேறு ஒரு வேட்பாளரை மொட்டுக்கட்சி தயார் செய்தால், உடனே சர்வதேச நீதி விசாரணை என்பது உட்பட ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பான ஏதேனும் அதிரடி நடவடிக்கையை ரணில் எடுத்து விட வாய்ப்பான சூழலை ‘சனல்–4’ காணொலி அவருக்கு வழங்கியிருக்கிறது.

சீட்டுக்கட்டு விளையாட்டில் அடுத்து என்ன சீட்டை மேசைக்கு இறக்குவது என்று தெரியாமல் தடுமாறிக் கொண்டிருந்த ரணிலுக்கு, அவர் கையில் இருந்த சாதாரண சீட்டையே துரும்புச் சீட்டாக மாற்றி விட்டிருக்கின்றது ‘சனல்–4’. மொத்தத்தில் ‘சனல்–4’ தோண்டி வெளிக்கொணர்ந்த பூதத்தினால் லாபம் என்னவோ ஜனாதிபதி ரணிலிக்குத்தான்...!

# இளையோரைப் போதைக்கு அடிமையாக்கும் கும்பலில் பெண் உள்ளிட்ட நால்வர் சிக்கினர்

## யாழ். பொலிஸார் அதிரடி நடவடிக்கை



யாழ்ப்பாணத்தில் பதின்ம வயதினரைப் போதைக்கு அடிமையாக்கும் கும்பலைச் சேர்ந்தவர்கள் எனும் குற்றச்சாட்டில் யாழில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வரை யாழ். பொலிஸார் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மாணவர்கள் மற்றும் பதின்ம வயது இளையோரைப் போதைக்கு அடிமையாக்கி, அவர்களுக்குப் போதைப்பொருளை விற்பனை செய்து வரும் கும்பல் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்து வந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் யாழில் உள்ள தனியார் வைத்திய சாலையில் பணிபுரியும் பெண்ணொருவர் உள்ளிட்ட நால்வரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் நால்வரும் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் எனவும், குறித்த நபர்கள் யாழில் இயங்கும் பாரிய போதைக்கும்பலின் வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் என வும், தொடர் விசாரணைகளின் அடிப் படையில் அவர்களின் வலையமைப் பைக் கைது செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தொல்லியல் பணிப்பாளரை உடன் பதவி நீக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் ஈ.பி.டி.பி. வலியுறுத்து

“தேசிய நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் முகமாகவும் நீதிமன்றத் தீர்ப்புக்களை மதிக்காதவருமான தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தை ஜனாதிபதி உடனடியாகப் பதவி நீக்க வேண்டும்.”

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

“அண்மைக்காலமாக சில அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அரசியல்வாதிகள் பலர் தேசிய நல்லிணக்கத்துக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றனர்.

இந்தக் கருத்துக்கள் மிக மோசமான நிலைமைகளை ஏற்படுத்தும். அதனால் அவர்கள் அவ்வாறான கருத்துக்களைத் தெரிவிப்பதை நிறுத்த வேண்டும்.




தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரின் செயற்பாடு நல்லிணக்கத்துக்குக் குந்தகம் ஏற்படுத்துகின்றமை மட்டுமல்ல, நீதித்துறையை மதிக்காத செயற்பாடும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

அதனால் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளர் உடனடியாகப் பதவி விலக வேண்டும். இல்லாவிடின், ஜனாதிபதி தேசிய நல்லிணக்கத்தைப் பேணிப் பாதுகாக்க இவ்வாறானவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரை உடன் அமுலுக்கு வரும் வகையில் பதவி நீக்க வேண்டும்.” – என்றார்.



# கிழக்கில் சொற்பொழிவாளர் ஒன்றியம்

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் புதிதாக சொற்பொழிவாளர் ஒன்றியம் ஒன்று உதயமாகியுள்ளது.

சைவத் தமிழர்களின் விஞ்ஞான மெய்ஞான தொடர்புகளை ஆலயங்கள், அறநெறிப் பாடசாலைகள், சமய நிகழ்வுகளில் போதித்து சமூகத்தை நன்நெறிப்படுத்தும் நோக்கில் இந்த அமைப்பு உருவாக்கபட்டுள்ளது.

கிழக்கிலங்கை சொற்பொழிவாளர் ஒன்றியம் என்ற பெயரில் இது உதயமாகி உள்ளது.

இதற்கான நிர்வாக கட்டமைப்பை உருவாக்கும் கூட்டம் கல்முனை தரவை சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்றது.

இதன் போது ஒன்றியத்தின் தலைவராக சிவஸ்ரீ க.வி.பிரமீன் சர்மா, பொதுச்செயலாளராக சிவத்திரு தினேஸ்குமார், பொருளாளராக சிவத்திரு மோகன், அம்பாறை மாவட்ட உபதலைவராக சிவத்திரு லக்குணம், உபசெயலாளராக சிவத்திரு தமிழகரன் சனாதனன், இணைப்பாளராக சிவத்திரு பிரதீபன் ஆகியோர் சபையால் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

# அம்பாறை அரச அதிபர் திருக்கோவில் விஜயம்!





(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு புதன்கிழமை (06) விஜயம் செய்தார்.

திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் அரச அதிபரை வரவேற்றார்.

இதன்போது பல கோடி ரூபாய் பெறுமதியான வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்த விஜயத்தின்போது திருக்கோவில் பிரதேச செயலர் பிரிவில் வாழும் 75 பேருக்கு காணிக்கான பத்திரம் வழங்கிவைக்கப்பட்டது.

சமுர்த்திப் பயனாளிகளுக்கும் இதன்போது உதவிகள் வழங்கப்பட்டன.

சமுர்த்திப் பயனாளி குடும்பங்களை சேர்ந்த 343 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நவீன விவசாய விரிவாக்கல் திட்டத்தின் கீழ் உலர்மிளகாய் உற்பத்தி செய்வதற்காக தங்கவேலாயுதபுரம் கிராமத்தை சேர்ந்த 05 பயனாளிகளுக்கு நீர் பம்பிகள் வழங்கி வைக்கப்பட்டன .

திருக்கோவில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு சிறுவர் விளையாட்டு கழகங்களுக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

விநாயகபுரம் பகுதியில் நன்னீர் மீன் வளப்புத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏழு தடாகங்களின் மீன்பிடி நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள சமூர்த்தி வங்கிகள் பார்வையிடப்பட்டன திருக்கோவில் பிரதேசத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட கிராம சேவகர் அலுவலகங்களையும் மேற்பார்வை செய்தார்.

இதன்போது அம்பாறை மாவட்ட செயலாளருக்கு சமுர்த்தி பிரிவினரால் பொன்னாடை போர்த்தி கௌரவம் வழங்கப்பட்டது.





# பாரதியாரின் கொள்ளுப் பேரனுக்கு கலாசாலையில் நேற்று வரவேற்பு

பாரதியாரின் கொள்ளுப் பேரனின் யாழ்ப்பாண வருகைக்கான வரவேற்பு வைபவம் கோப்பாய் ஆசிரியர் கலா சாலையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று (07) அதிபர் திரு ச.லலீசன் தலைமையில் இடம் பெற்றது

பாரதியாரின் கொள்ளுப் பேரனும் பொறியியலாளரும் பிரபல கர்நாடக இசைப் பாடகருமாகிய டாக்டர் ராஜ்குமார் பாரதியே வரவேற்கப்பட்டார்.

அவருடன் கொழும்பின் பிரபல நடன ஆசிரியர் திவ்யா சுஜேன் அவர்களும் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வை விரிவுரையா ளர் வேல் நந்தகுமார் முன்னிலைப் படுத்தினார். பிரதம விருந்தினர் அறிமுக உரையை விரிவுரையாளர் கு.பால சண்முகன் ஆற்றினார்.

கலாசாலையின் அதிபர், பிரதி அதி பர்கள் உள்ளிட்ட சமூகத்தினர் ராஜ்குமார் பாரதிக்கான கௌரவத்தையும் யாழ்ப் பாண வருகையை அடையாளப்படுத் தும் நினைவுச் சின்னத்தையும் வழங்கி கௌரவித்தனர்.

ராஜ்குமார் பாரதி தனது உரை யின்போது பாரதியார் பாடல்களை தனது இனிய குரலில் பாடியும் இளம் தலைமுறையினரிடையே பாரதி யாரின் கருத்துக்களை கொண்டு சேர்ப் பதற்கான உத்திகள் பற்றியும் விளக்கிக் கூறினார்.



# ஆங்கில தினப் போட்டியில் முதலிடம்



(கே. எ. ஹமீட்)

அக்கரைபற்று வலயத் தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் இக்றஃ வித்தியலயம் முதலாம் இடத்தை பெற்று மாவட்ட மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதன் போது பாடசாலையின் அதி பர் எ. எல். யாசின் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்தார்.



# தொழுநோயை ஒழிக்கும் வேலைத்திட்டம் முன்னெடுப்பு

## கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

**(றியாஸ் ஆதம்)**

தொழுநோயை கல்முனை பிராந்தியத்தில் இருந்து முற்றாக ஒழிக்கும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

தேசிய தொழுநோய் தடுப்பு இயக்கம் மற்றும் கல்முனைப் பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவு என்பன இணைந்து கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று (07) நடத்திய தொழுநோய் ஒழிப்பு தொடர்பான விசேட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழுநோயை ஒழிக்கும் வகையில் எமது பிராந்திய தொற்று நோய் தடுப்பு பிரிவினர் அரச வைத்திய சாலைகளுக்கு மாத்திரமன்றி தனியார் சிகிச்சை நிலையங்கள் மத நிறுவனங்களுக்கும் சென்று இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

விசேடமாக வெளி நோயாளர் பிரிவுகளில் இவ்வாறான செயற்பாடுகளை கண்காணிப்பதற்கு விசேட பொறிமுறை வகுக்கப்பட்டுள்ளது. துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகளை அனைத்து நிறுவனங்களுக்கும் விநியோகித்து வருகிறது.-என்றார்.

கல்முனை பிராந்திய தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். பஸாலினது ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம் றிபாஸ், பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம்.பீ.ஏ.வாஜித், தேசிய தொழுநோய் தடுப்பு இயக்கத் தின் பணிப்பாளர் டாக்டர் ரணவீர, திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், தோல்நோய் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் ஐ.எல்.மாஹில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் இருந்து தொழுநோய் பிரிவுகளில் கடமையாற்றும் வைத்தியர்களும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட நிலை சாதனை மாணவர்கள் கௌரவிப்பு



**( வி.ரி. சகாதேவராஜா)**

அண்மையில் வெளியான க.பொ.த. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் அம்பாறை மாவட்டத்தில் கணித பாடத்தில் மாவட்ட நிலையில் மெரிட் சாதனை படைத்த மாணவர்கள் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயத்தில் ( தேசிய பாடசாலை) நேற்று கௌரவிக்கப்பட்டார்கள்.

கணித பாடத் துறையில் மூன்று 'ஏ' சித்திகளைப் பெற்று மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் இருக்கும் ஆர். கம்ஷயன், மாவட்டத்தில் 5ஆம் நிலையில் இருக்கும் குணபாலன் சஞ்சயன் , மாவட்ட நிலையில் 7ஆம் இடத்தில் இருக்கும் ஆர்.அருணியா ஆகிய மூன்று கணிதத்துறை மாணவர்கள் மற்றும் கலைத்துறையில் மூன்று 'ஏ' சித்தி பெற்ற எஸ். தட்சணா ஆகிய மாணவியும் கௌரவிக்கப்பட்டனர்.

கணித பாட மாவட்ட நிலை சாதனை மாணவர்கள் மூவரும் மெரிட் சித்தி அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டவர்கள்.

தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலய அதிபர் திருமதி கோமளா பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் திருக்கோவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் எஸ். ரவீந்திரன் கலந்து கொண்டார்.

# இன்றைய ராசி பலன்கள் - 09.09.2023

## மேஷம்

உங்கள் தினசரி செயல்களை செய்வது கடினமாக இருக்கும்.முக்கியமான முடிவுகளை இன்று எடுக்க வேண்டாம்.இன்று அமைதியுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம்.உங்கள் சகபணியாளர்களுடன் உரையாடும் பொழுது அமைதியான முறையை கடைபிடிக்க வேண்டும்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் நட்போடு பழகுங்கள்.

பணத்தை தக்க வைத்துக்கொள்வதை கடினமாக உணர்வீர்கள். செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள்.

இன்று நரம்பு சம்பத்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படலாம். தகுந்த சிகிச்சை மேற்கொள்வது நல்லது.

## ரிஷபம்

சாதகமான பலன்களுக்கு உங்கள் புத்திசாலிதனத்தில் நம்பிக்கை வைத்து செயலாற்றுங்கள். உங்களது நேர்மறையான எண்ணங்களும் தைரியமும் இதற்கு உதவும்.

உங்கள் பணி மேலதிகாரிகளால் பாராட்டப்படும். உங்களிடம் உள்ள திறமைகளை வெளிக் கொண்டு வர வேண்டும்.

உங்கள் துணையைப் புரிந்துகொண்டு அவரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

உங்கள் நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். பயனுள்ள வகையில் இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.

## மிதுனம்

பொழுதுபோக்கு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க இயலும். பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் சிறிது முயற்சி எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் அதிகப் பணிகள் காணப்படும். எனவே திட்டமிட்டு முறையாக பணியாற்றினால் திறமையாக செயலாற்ற முடியும்.

இன்று மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் துணையிடம் பேசும் போது பொறுமை அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். உங்களிடம் பணம் இருந்தாலும் திருப்திகரமான நிலை இருக்காது. செரிமானக் கோளாறு பிரச்சினைகள் ஏற்படலாம்.

## கடகம்

இன்று பொறுமையுடன் இருக்க வேண்டும்.உங்கள் உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.தியானம் அல்லது யோகா மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாள்வது கடினம். அதிகரிக்கும் வேலை காரணமாக தவறுகள் நேரலாம்.

உங்கள் துணையுடன் சகஜமாகப் பேசுவதன் மூலம் உறவில் திருப்தி நிலவும்.

இன்று பணத்தை சரியான முறையில் பயன்படுத்த இயலாது. பணம் கரைந்து விடும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று கவலையின் காரணமாக பதட்டமாக காணப்படுவீர்கள்.

## சிம்மம்

மனதில் உள்ள குழப்பங்கள் காரணமாக மேற்கொண்ட செயல்கள் தாமதமாக முடியும்.உங்கள் அஜாக்கிரதை காரணமாக விலைமதிப்பு மிக்க பொருளை இழக்க நேரும்.

இன்று பயணங்கள் ஏற்படலாம்.அதனால் பதட்டம் காணப்படும்.இந்த பயணம் உங்களுக்கு மகிழ்ச்சியளிப்பதாக இருக்காது.

இன்று விஷயங்களை சகஜமாக எடுத்துக்கொள்ளுங்கள். பேச்சுவார்த்தை மூலம் கருத்து வேறுபாடுகளை தீர்க்க முடியும்.

இன்று அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக தேவையில்லாத செலவுகளை எதிர்கொள்ள நேரும். இது தவிர்க்க இயலாதது.

கால்கள் மற்றும் தோள்களில் வலிகள் காணப்படும். உடலை ஆரோக்கியமாக வைத்திருக்க உடற்பயிற்சி மேற்கொள்வது நல்லது.

## கன்னி

ஆன்மீகம் மற்றும் அது சம்பந்தமான ஈடுபாடு மகிழ்ச்சியை அளிக்கும். அனுபவம் மூலம் இன்று பாடம் கற்கும் வாய்ப்பு ஏற்படும்.

உங்கள் பணிகளை குறிப்பிட்ட நேரத்துக்கு முன் உங்களால் செய்ய இயலும்.இதன் மூலம் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள்.

இன்று உங்கள் துணையிடம் இனிமையான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரும் பொருத்தமான ஜோடிகளாகத் திகழ்வீர்கள்.

இன்று பணம் மிகுதியாக காணப்படும். வங்கியிருப்பு அதிகரிக்க முடியும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியக் குறைபாடுகள் ஏதும் இருக்காது.

## துலாம்

நீங்கள் விரைவாக செயலாற்றி உங்கள் பொறுப்புகளை எளிதில் முடிப்பீர்கள்.உங்கள் கனவுகள் நனவாகும். உங்களின் நேர்மறையான மனப்பாங்கின் மூலம் உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள்.

நீங்கள் ஆற்றும் பணியின் மூலம் நற்பலன்கள் கிடைக்கும்.உங்களிடம் காணப்படும் உற்சாகம் காரணமாக நீங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் அவரை நன்கு புரிந்து கொள்ள முடியும். இதனால் மகிழ்ச்சி ஏற்படும்.

எதிர்பாராத பண வருவாய் காணப்படும். இதனால் மிகுந்த திருப்தி உங்களுக்கு ஏற்படும்.

இன்று உங்களிடம் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக சௌகரியமாகவும் ஆரோக்கியமாகவும் காணப்படுவீர்கள்.

## விருச்சிகம்

நீங்கள் உங்கள் முயற்சியின் மீது நம்பிக்கை வைத்து உங்கள் திறமைகளை மேம்படுத்துவதன் மூலம் சாதகமான பலன்களைப் பெறலாம்.

உங்கள் பணிக்கு உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கவில்லை என்று நீங்கள் எண்ணுவீர்கள்.இதனால் உங்கள் தன்னம்பிக்கை குறையும்.குறித்த நேரத்தில் பணிகளை முடிக்க இயலாது.

உங்கள் துணையிடம் உங்கள் மனதில் உள்ள பதட்டத்தையும் ஏமாற்றத்தையும் காண்பிப்பீர்கள்.

பண இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் இன்று பணத்தை மிகவும் கவனமாக கையாள வேண்டும். பணத்தை திட்டமிட்டு செலவு செய்வது நல்லது.

இன்று கால் வலி மற்றும் தோல் எரிச்சல் போன்ற உபாதைகளுக்கு ஆளாவீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் -09.09.2023




இன்று ஏமாற்றங்கள் காணப்படுவதால் இன்றைய நாளை திட்டமிட வேண்டியது அவசியம்.பொறுமையாக இருந்து மிடுக்குடன் செயல்பட வேண்டும்.இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

இன்று பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் பணிகளைக் கையாளும்பொழுது கவனம் தேவை. எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே வாய்சண்டை நடக்கலாம். அதனால் உங்கள் துணையுடன் பேசுவதை தவிர்ப்பது நல்லது.

இன்று அதிக செலவுகள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். நஷ்டத்தை தவிர்க்க உங்கள் நிதிநிலையை கண்காணிக்கவும்.




நீங்கள் நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.உங்களிடம் காணப்படும் தன்னம்பிக்கை காரணமாக கடினமான பணிகளையும் எளிதாக முடிப்பீர்கள்.

உங்கள் பணிகளை திறமையுடன் மேற்கொள்வதில் நேர்மையாக இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை சம்பாதிப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் அமைதியோடு பேசுவீர்கள். உங்களின் மனம் திறந்த இந்த அணுகுமுறை உறவின் பிணைப்பை வலுப்படுத்தும்.

உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். அதை உங்கள் குடும்பம் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் வெளியிடம் செல்லுதல் போன்ற பயனுள்ள விஷயங்களுக்காக செலவு செய்வீர்கள்.




உங்களுக்கு நன்மை பயக்கும் முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பீர்கள்.பொதுவாக திருப்தியுடன் காணப்படுவீர்கள்.

உங்களால் சுமுகமாக பணியாற்ற இயலும்.உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சம நிலையோடு பழகுவீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

உங்களிடம் காணப்படும் பணம் உங்களுக்கு போதுமானதாக இருக்கும். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆரோக்கியத்துடனும் திருப்தியுடனும் காணப்படுவீர்கள்.




தியானம் மூலம் மன அமைதியை பெறலாம்.எதிர்மறை எண்ணங்களை தவிர்க்க வேண்டும்.பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய திட்டமிடல் அவசியம்.

இன்று உங்கள் போக்கில் அனுசரணை கடைபிடிப்பதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியான தருணங்களைக் காணலாம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படாமல் சகஜமாக நடந்து கொள்ளுங்கள்.

நீங்கள் எதிர்பாராதவிதமாக பணத்தை இழக்க நேரலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.

இன்று உங்கள் தன்னம்பிக்கை குறைந்து காணப்படும். உடற்பயிற்சி செய்து புத்துணர்வு பெறலாம். இதன் மூலம் நீங்கள் ஆரோக்கியமாக இருக்கலாம்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK JA-ELA

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539



Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா

கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co

Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park



# கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தின் எண்பது வீதமான நிர்மாணப் பணிகள் பூர்த்தி

கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தின் 80 சதவீத நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் செயற்பாடுகளை அடுத்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர குறிப்பிட்டுள்ளார்.

துறைமுக அதிகார சபையின் நிதியைப் பயன்படுத்தி இந்த திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை 85 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

கிழக்கு முனையத்தின் செயற்பாடுகளுக்காக முதற்கட்டமாக 12 அதிநவீன பாரந்தூக்கிகளை பொருத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுமென துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத்தின் 20 வீத நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார்.

அதானி நிறுவனத்தின் முதலீடாக அமைந்துள்ள இந்த வேலைத்திட்டத்திற்காக 85 கோடி மில்லியன் அமெரிக்க டொலர் நிதி செலவிடப்படுகின்றது.

அடுத்த வருடம் நவம்பர் மாதத்தில் இதன் முதற்கட்டத்தை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கிழக்கு மற்றும் மேற்கு முனைய நிர்மாணப் பணிகள் நிறைவடைந்தவுடன் கொழும்பு துறைமுகத்தின் வருடாந்த கொள்கலன் இரு மடங்காக அதிகரிக்கும் என துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன்சந்திர தெரிவித்துள்ளார்.

# நிறுத்தி வைக்கப்பட்டுள்ள 6 ரயில்களால் ரயில் போக்குவரத்துக்கு பெரும் பாதிப்பு

கொழும்பிற்கான பயணத்தை முன்னெடுக்க முடியாமல் ஆறு ரயில்கள் தற்போது வெயங்கொட ரயில் நிலையத்திற்கு அருகில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு நோக்கி புறப்பட்ட இரவு நேர தபால் ரயில், கம்பஹா – வெயங்கொடைக்கு இடையில் இயந்திரக்கோளாறுக் குள்ளானமையே இதற்கான காரணமாகும்.

இயந்திரக்கோளாறுக்குள்ளான ரயிலின் என்ஜினை அப்புறப்படுத்த முடியாமல் உள்ளது என ரயில்வேப் போக்குவரத்து அத்தியட்சகர் இதிபொலகே தெரிவித்துள்ளார்.

ரயில் போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் காரணமாக பொதுமக்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் பாரிய சிக்கல்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனிடையே, ரயில் என்ஜினில் ஏற்பட்ட இயந்திரக்கோளாறினால் பிரதான மார்க்கத்தில் கம்பஹா – வெயங்கொட இடையில் ஒருவழிப்போக்குவரத்து மாத்திரமே முன்னெடுக்கப்படுகிறது என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் இதிபொலகே தெரிவித்துள்ளார்.

# நாலாயிரம் கிராம அலுவலர்களை சேவையில் இணைக்கத் திட்டமாம்

வெற்றிடங்களை நிரப்புவதற்காக நான்காயிரம் கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அஷோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கைகளுக்காக பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க தலைமையில் குழுவொன்றை நியமிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

# அரசுகள் மாறினாலும் கொள்கைகள் நிலையானதாகவே இருக்கவேண்டும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரிப்பது தொடர்பான வரைவுகளை இவ்வருட இறுதிக்குள் தயாரிக்குமாறு உரிய அமைச்சர்களுக்குப் பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரசுகள் மாறினாலும், கொள்கைகளை நிலையாகப் பேணுவது அவசியமானது என்றும், காலத்திற்குக் காலம் மாறும் கொள்கைகளால் ஒரு நாடு ஒருபோதும் முன்னேற முடியாது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நேற்று முற்பகல் அலரி மாளிகையில் நடைபெற்ற தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அறிமுக நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை அமுல்படுத்துவதற்கான கட்டமைப்பு, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தனவால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி,

"நாட்டில் செயற்திறனான நிர்வாகத்தை ஸ்தாபிப்பதில் ஒரு முக்கியமான தருணத்தை குறிக்கும் வகையில், நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தேசிய மதிப்பீட்டுக் கொள்கை அமுலாக்க வரைவை வெளியிடும் வாய்ப்பு நமக்கு கிடைத்துள்ளது.

2017ஆம் ஆண்டு முன்மொழியப்பட்ட இந்தக் கொள்கை 2018 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் கலந்துரையாடப்பட்டு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. 7 வருடங்களின் பின்னர் இன்று இந்த தேசிய கொள்கை அமுலாக்க வரைவை வெளியிடுவது அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் ஸ்திரத்தன்மையை நிலைநிறுத்துவதற்கான ஒரு முக்கிய நடவடிக்கையாகக் குறிப்பிடலாம்.

தேசிய மதிப்பீட்டுக் கொள்கையைச் செயல்படுத்துவதில் நிதி அமைச்சு மற்றும் திட்ட முகாமைத்துவத் திணைக்களத்துக்கு முக்கிய பொறுப்பு உள்ளது. அரச கொள்கைகளின் வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தி, மூன்று மொழிகளிலும் இந்தப் புதிய கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அரசின் அதிக செலவீனங்களைக் கொண்ட பத்து அமைச்சுகளின் செலவுகள் குறித்த பகுப்பாய்வு தற்போது இடம்பெற்று வருகின்றது.

இந்த வருட இறுதிக்குள் வெளிவிவகாரக் கொள்கை வரைவைத் தயாரிக்குமாறு வெளிவிவகார அமைச்சருக்கு நான் பணிப்புரை விடுத்துள்ளேன். அத்துடன், நாட்டின் பாதுகாப்பு தொடர்பாக நீண்டகாலமாக அவதானத்தைப் பெற்றுவந்த தேசிய பாதுகாப்புக் கொள்கையை தயாரிக்குமாறும் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய மேற்படி அமைச்சின் செயற்பாடுகளை பின்பற்றி ஏனைய அமைச்சுக்களும் தேசிய கொள்கை கட்டமைப்பை பின்பற்ற வேண்டும்.

நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்காக அமைச்சுக்கள் மட்டத்தில் தேசிய கொள்கைகளை திறம்பட செயல்படுத்துவது அவசியமானது. அது திட்டமிடல் மற்றும் செயல்படுத்தலின் போது எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நிவர்த்திக்கவும் உதவியாக அமையும்.

ஏழு வருடங்களுக்கு முன்னர் தேசிய மதிப்பீட்டுக் கொள்கையின் தேவை குறித்து கவனம் செலுத்தப்பட்டது. அதனை நனவாக்க அர்ப்பணிப்புக்களை செய்த அனைவரையும் பாராட்டுகின்றேன்.

நிலையான தேசியக் கொள்கை இல்லாதது நாட்டின் ஆட்சி முறையில் காணப்படும் மிகப்பெரிய குறைப்பாடாகும். தேசியக் கொள்கை கட்டமைப்பை நடைமுறைப்படுத்துவதற்காக நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்ட குழுவுக்கு பெரும் பொறுப்பு உள்ளது. இந்தக் கொள்கைகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகும்.

அரச நடவடிக்கைகள் தொடர்பில் வலுவான மதிப்பீடு மிகவும் முக்கியமானது. தேசிய மதிப்பீட்டுக் கொள்கையை வலுவாக நடைமுறைப்படுத்த அரச அதிகாரிகளின் அர்ப்பணிப்பும் அவசியம்.

அரச சேவைக்குள் ஒழுக்கத்தையும் ஒழுங்குமுறைகளையும் உருவாக்குவதே இதன் மற்றுமொரு நோக்கமாகும். பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான நிலையான சூழலை பேணவும் அரசுகள் மாறினாலும் நிலைக்கூடியதாக இந்த கொள்கைகள் அமைய வேண்டும்.

இலங்கை இந்தக் கொள்கையுடன் முன்னோக்கிச் செல்லும் போது, தேசியக் கொள்கைகள் தொடர்பில் அதிக இணக்கப்பாடு ஏற்படும் என்றும் அதன் பலனாக விரிவான தேசிய கொள்கை ஒன்றுக்காக வரைவு உருவாவதற்கு சந்தர்ப்பம் ஏற்படும் எனவும் நம்புகின்றோம்.

இந்த தேசிய கொள்கைகளுடன் முன்னோக்கி செல்லும் வழியை திட்டமிடும் தருணத்தில் கடன் நீடிப்பு தொடர்பான பேச்சுகளும் முன்னேற்கரமாக அமைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது. இதன்போது, அரச நிதிக் குழு மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகளின் கடுமையான விமர்சனங்கள் மற்றும் சிக்கல்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க இணக்கப்பாடுகளை எட்டவும் முடிந்துள்ளது." – என்றார்.

இந்த நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, செஹான் சேமசிங்க, லசந்த அழகிய வண்ண, துறைசார் அமைச்சுக்களின் செயலாளர்கள், உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

# யுத்தக் குற்றங்கள், ஈஸ்டர் தாக்குதல் இரண்டுக்குமே சர்வதேச விசாரணை

## வலியுறுத்துகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என வலியுறுத்தியுள்ள ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் 'சனல்-4' வெளியிட்டுள்ள விடியோ விவகாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மூடி மறைக்க முயலக்கூடாது என்றும் கேட்டுள்ளார்.

யாழில் நேற்றுத் தாம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் கடந்த 2019 ஆண்டு நடாத்தப்பட்ட ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் 'சனல்-4' வெளியிட்டுள்ள வீடியோ பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக ஈஸ்டர் குண்டு தாக்குதல் சம்பந்தமாகவும் அதே நேரம் ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்க படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாகவும் பல வேறு விஷயங்களை உள்ளடக்கியதாக - அதிலும் இந்த சம்பவங்கள் குறித்தான சாட்சியங்களைத் தொகுத்து 'சனல்-4' ஒரு காணொலியை வெளியிட்டு இருக்கிறது.

இந்த வீடியோ உண்மைக்குப் புறம்பானது என்று பிள்ளையான், நாமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ போன்றோர் கூறுவது மாத்திரமல்லாமல் அதற்கு எதிரான தமது கருத்துக்களையும் வெளியிட்டு இருக்கின்றார்கள்.

தேர்தலுக்காக இவ்வாறான விஷயங்கள் வெளியிடப்பட்டு உள்ளன எனவும் சொல்லப்பட்டு இருக்கின்றது. இத்தகைய நிலைமைகளில் தான் தற்போது பல்வேறு கேள்விகள் மட்டுமல்ல பலத்த சந்தேகங்களும் ஏற்பட்டு உள்ளன.

குறிப்பாக இனப்படுகொலை நடைபெற்ற போது அதற்கு ஒரு சர்வதேச விசாரணை தேவை இல்லை என்று சொன்ன பல்வேறுபட்ட தரப்பினர்களும் இன்று சர்வதேச விசாரணை குறித்துப் பேசுகின்றனர்.

'சனல்-4' வெளியிட்ட வீடியோவில் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட பின்பு இன்று ஒரு சர்வதேச விசாரணை தேவை என்று கூறுகின்றனர்.

குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அவரது கட்சி உறுப்பினர்கள்ளும் கொழும்பு பேராயர் மல்கம் ரஞ்சித் உள்ளிட்டவர்களும் சர்வதேச விசாரணை தேவை என்று சொல்கின்றார்கள்.

ஆக மொத்தத்தில் இலங்கையினுடைய நீதிமன்றத்தின் மீதும் இலங்கை அரசாங்கத்தின் மீதும் இவர்களுக்கே நம்பிக்கை இழந்து ஒரு சர்வதேச விசாரணை ஒன்றின் மூலமாக மாத்திரம்தான் உண்மைகளைக் கண்டறிய முடியும் என்ற ஒரு விடயத்தைச் சொல்கின்றார்கள்.



யுத்தம் முடிந்ததற்கு பிற்பாடு இனப் படுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என தமிழ்த் தலைமைகள் மீண்டும் மீண்டும் கூறினார்கள்.

ஆகவே சர்வதேச விசாரணை என்பது வரவேற்கப்பட வேண்டிய விடயமாகத் தான் இருக்கிறது. அந்த சர்வதேச விசாரணை என்பது வெறுமனே ஈஸ்டர் குண்டு தாக்குதலுக்கு மாத்திரம் அல்ல. ஓர் இனப் படுகொலை நடந்ததற்கான சர்வதேச விசாரணையும் தேவை.

சிங்கள தலைமைகள் முதலில் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது சர்வதேச விசாரணை என்பது மிக மிக முக்கியமானது என்பதையும் அதனூடாகவே நீதியை பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டுமாக இருந்தால் அல்லது இதன் சூத்திரதாரிகளுக்கு தண்டனை கிடைக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயம் சர்வதேச விசாரணை என்பது மிக மிக முக்கியமானது.

இந்த சர்வதேச விசாரணையோடு இதன் சூத்திரதாரிகள் தண்டிக்கப்பட்டால் மாத்திரமே இந்த நாடு ஒரு ஜனநாயக பூர்வமான நாடாக மாறும்.

நாட்டில் முழுமையாக ஜனநாயகம் இருக்கிறதான ஒரு தன்மை உருவாக்க வேண்டுமாக இருந்தால் நிச்சயம் இவர்களுக்கு எதிராக ஒரு முழுமையான சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும்.

அந்த விசாரணை என்பது உள்நாட்டில் சாத்தியமானது அல்ல. ஆகையினால் ஒரு சர்வதேச விசாரணை நடத்தி இந்த சூத்திரதாரிகளை கண்டுபிடிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ போன்றோர் ஒரு கூட்டான நடவடிக்கை எடுத்து அவர்கள் இதனை செய்ய வேண்டும்.

அவ்வாறு இவர்கள் செய்யவில்லை என்றால் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவதற்கு மும்முரமாக இருக்கக்கூடிய இவர்களுக்கு வாக்களிப்பதில் மக்களுக்கு எந்தவிதமான புண்ணியமும் கிடையாது.

அது சிங்கள மக்களோ, தமிழ் மக்களோ, முஸ்லிம் மக்களோ யாருக்குமே எந்தவித புண்ணியமும் கிடையாது. ஆகையினால் வெளிவந்துள்ள வீடியோவின் அடிப்படையில் சர்வதேச விசாரணையை நடாத்த வேண்டும்.

இன்றைக்கு ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு சர்வதேச விசாரணை தேவை என தெற்கிலே பலரும் கோரி வருகிற நிலையில் இனப் படுகொலைக்கும் சர்வதேச விசாரணை தேவை என நாங்களும் வலியுறுத்தி வருகிறோம்.

ஆகையினால் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்கு மட்டுமல்லாது இனப் படுகொலைக்கும் சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆகையினால் 'சனல்-4' வெளியிட்டுள்ள குறித்த இரண்டு விடயங்கள் சம்பந்தமான வீடியோக்களை மூடிமறைக்கும் வகையில் ஜனாதிபதி செயற்படக் கூடாது எனக் கேட்டுக் கொள்கிறோம். - என்றார்.



# வடக்கு, கிழக்கு இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாநாடு நேற்று

இளைஞர் தலைமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்திற்கான மாநாடும் பரிசளிப்பு விழாவின் இறுதி நிகழ்வும் நேற்றையதினம் வவுனியா பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

வவுனியா பல்கலைக்கழகமும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டமும் இணைந்து வடக்கு – கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கி எதிர்கால சமூக மட்டத்தில் அபிவிருத்தியை மேற்கொள்ளக்கூடிய தலைவர்களை உருவாக்கும் நோக்கோடு முன்னெடுக்கப்பட்ட இத்திட்டத்தின் இறுதிநாள் நிகழ்வில் மாணவர்களுக்கான பரிசளிப்பு இடம்பெற்றது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் வியாபார கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி வை.நந்தகோபன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண ஆளு நர் சாள்ஸ் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது பல்வேறு துறைகளிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கி வைக்கப்பட்டன. இந் நிகழ்வில் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் வவுனியா, யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.





















# பிரதமர் நரேந்திர மோடியுடன் அமெரிக்க ஜனாதிபதி பேச்சு!



ஜி 20 உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா சென்றுள்ள அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ஜி 20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இந்தியா சென்றுள்ளார். அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் அவர் இந்தியா செல்வது இதுவே முதல்முறையாகும்.

நேற்று இரவு 7 மணி அளவில் புதுடில்லி விமான நிலையத்தை சென்றடைந்த அவரை, மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே. சிங் வரவேற்றார். இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டியும் உடன் இருந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியை வரவேற்கும் விதமாக விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நடன நிகழ்ச்சியை ஜோ பைடன் பார்த்து ரசித்துள்ளார்.

இதையடுத்து, ஜனாதிபதி ஜோ பைடன், பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துள்ளார். இதன்போது, இருதரப்பு உறவை மேம்படுத்துவது தொடர்பாக இரு தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளனர்.

அத்துடன், இந்தியாவில் ஜெட் என்ஜின்களை கூட்டாக தயாரிக்கும் ஒப்பந்தத்தின் முன்னேற்றம், ஆயுதம் தாங்கிய ஆளில்லா விமானங்களை வாங்குதல், சிவில் அணுசக்தி பொறுப்பு மற்றும் வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தம் குறித்து இந்த சந்திப்பின்போது பேசப்பட்டுள்ளது என தகவல் வெளியாகி உள்ளது.

இதேவேளை, மொரீஷியஸ் பிரதமர் பிரவிந்த் குமார் யுக்நாத், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா ஆகியோர், பிரதமர் நரேந்திர மோடியை அவரது இல்லத்திற்குச் சென்று சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்த நாடுகளுடனான இந்தியாவின் இருதரப்பு உறவுகளை ஆய்வு செய்வது, வளர்ச்சி ஒத்துழைப்பை மேலும் வலுப் படுத்துவது போன்ற விடயங்கள் இந்த சந்திப்புகளின் முக்கிய நோக்கமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பிரதமர் நரேந்திர மோடி, எதிர்வரும் இரண்டு நாட்களில் 15 இற்கும் மேற்பட்ட இருதரப்பு சந்திப்புகளை நடத்தவுள்ளார்.





# அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கு ஜி 20 மாநாடு புதிய பாதையை வகுக்கும்!

## - பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை

மனித நேயத்தை மையமாகக் கொண்ட, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் புதுடில்லி ஜி 20 உச்சிமாநாடு ஒரு புதிய பாதையை வகுக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஜி 20 அமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றதை அடுத்து, அந்த அமைப்பு சார்பில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் மாநாடுகள் நடத்தப்பட்டன. இதன் நிறைவாக ஜி 20 உச்சிமாநாடு புதுடில்லியில் இன்று ஆரம்பமாகிறது.

இரண்டு நாட்கள் நடைபெற உள்ள ஜி 20 உச்சிமாநாடு குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள சமூக வலைத்தள பதிவில், 18 ஆவது ஜி 20 உச்சிமாநாட்டை நடத்துவதில் இந்தியா மகிழ்ச்சியடைகிறது.

இந்தியா நடத்தும் முதல் ஜி20 உச்சி மாநாடு இதுவாகும். புதுடில்லி ஜி 20 உச்சி மாநாடு மனித நேயத்தை மையமாகக் கொண்ட மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் ஒரு புதிய பாதையை வகுக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இது என் உறுதியான நம்பிக்கை.

உலகம் ஒரே குடும்பம் என்பதே நமது கலாச்சாரத்தில் வேரூன்றிய ஆழமான நெறிமுறை. அதுவே இந்தியாவின் ஜி 20 தலைமையின் கருப்பொருள். ஒரு பூமி, ஒரு குடும்பம், ஒரு எதிர்காலம்' என்ற சிந்தனை, உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற நமது உலகக் கண்ணோட்டத்துடன் ஆழமாக எதிரொலிக்கிறது. மனிதனை மையமாகக் கொண்ட முன்னேற்றத்திற்கு இந்தியா அதிக முக்கியத்துவம் அளிக்கிறது.

இந்தியாவின் ஜி20 தலைமைத்துவம் அனைவரையும் உள்ளடக்கியதாகவும், லட்சியமிக்கதாகவும், தீர்க்கமானதாகவும், உலகளாவிய தெற்கின் வளர்ச்சி, கவலைகளுக்கு தீவிரமாக குரல் கொடுக்கும் செயல் சார்ந்ததாகவும் உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

# அணு ஆயுதம் கொண்ட கடற்படையை உருவாக்குகின்றார் வடகொரிய ஜனாதிபதி





வடகொரியா முதல் முறையாக அணு ஆயுதத்தாக்குதல் நடத்தும் திறன்கொண்ட நீர்மூழ்கி கப்பலை பயன்பாட்டிற்கு கொண்டுவந்துள்ளது.

இந்த கப்பலை வெளிப்படுத்தும் நிகழ்வில் பங்கேற்ற வடகொரிய ஜனாதிபதி கிங் ஜோங் உன், நாட்டின் கடற்படையின் துரித வளர்ச்சி மற்றும் அதன் 'அணு ஆயுதமயமாக்கல்' ஆகியவற்றிற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வடகொரியா, தனது முதலாவது தந்திரோபாய அணுத் தாக்குதல் திறன்கொண்ட நீர்மூழ்கி கப்பலின் செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது. இது அமெரிக்கா மற்றும் அதன் ஆசிய நட்பு நாடுகளை எதிர்கொள்ள அணு ஆயுதம் கொண்ட கடற்படையை உருவாக்கும் கிம் ஜோங் உன்னின் திட்டத்தின் முக்கிய பகுதியாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வட கொரிய முக்கிய வரலாற்று நபராக அறியப்படும் கிம் குன் ஓகே இன் பெயர், 841 என்ற எண் கொண்ட குறித்த நீர்மூழ்கி கப்பலுக்கு சூட்டப்பட்டுள்ளது.

இந்த நீர்மூழ்கி கப்பலை பயன்பாட்டிற்கு கொண்டுவரும் நிகழ்வானது கிம் ஜோங் உன் தலைமையில் நடைபெற்றது என அந்த நாட்டின் அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

நீருக்கடியில் இருந்து தந்திரோபாய அணு ஆயுதங்களை ஏவும் வகையில் இந்த நிர்மூழ்கிக் கப்பல் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், வடகொரிய கடற்படைக்கு இதுவொரு புதிய அத்தியாயத்தின் தொடக்கம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் குறித்த நீர்மூழ்கி கப்பல் சுமந்து செல்லக் கூடிய ஏவுகணைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் எதனையும் வடகொரிய ஊடகம் வெளியிட வில்லை.

இந்த நிலையில் வடகொரியாவின் 10 புக்கொக்சோங் 3 என்ற ஏவுகணைகளை சுமந்து சென்று நீருக்கு அடியில் இருந்து தாக்குதல் திறன்கொண்டதாக குறித்த நீர்மூழ்கி கப்பல் உள்ளது என

## மோதலை முடிவுக்கு கொண்டுவர அமைதிப் பேச்சு: கட்டாருக்கு பயணமானார் சூடான் இராணுவ தளபதி



சூடானில் இராணுவப் படைகளுக்கிடையே இடம்பெறும் மோதலினை முடிவுக்கு கொண்டுவருவதற்கான அமைதிப் பேச்சுவார்த்தையில் பங்கேற்பதற்காக, சூடானின் இராணுவத் தளபதி கட்டார் பயணமாகியுள்ளார்.

அமைதிப் பேச்சுக்காக இராணுவத் தளபதி அப்துல் ஃபட்டா அல்-புர்ஹான் கட்டார் பயணமாகியுள்ளார்.

மோதல் ஆரம்பமாகி 05 மாதங்களில் அவர் பயணம் மேற்கொண்ட மூன்றாவது சர்வதேசப் பயணமாக இது உள்ளது என்று தகவல்கள் கூறப்பட்டுள்ளது.

வட ஆபிரிக்க நாடான சூடானில் அல்-புர்ஹான் தலைமையிலான இராணுவத்திற்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான ஆர்.எஸ்.ஃப் துணை இராணுவப் படைக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றது.

இந்த மோதலிற்கு அதிகாரப்போட்டியே காரணம் என்றும் கூறப்படுகிறது. இந்த ஆண்டின் ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி முதல் இந்த யுத்தம் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், இந்த மோதலினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சர்வதேச நாடுகள் மேற்கொண்டுவரும் அனைத்து முயற்சிகளும் தோல்வியில் முடிவடைந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

## சிலி நாட்டில் நிலநடுக்கம்



தென் அமெரிக்க நாடான சிலியில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

அந்நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள கோகிம்போவில் இருந்து தென்மேற்கே 41 கிலோ மீட்டர் தொலைவில் மையம் கொண்டு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவுகோலில் 6.2 புள்ளிகளாக பதிவாகியுள்ளது என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பயங்கர நிலநடுக்கத்தால் கட்டடங்கள் குலுங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

சிலியில் கடந்த 2010ஆம் ஆண்டு 8.8 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. அதைத்தொடர்ந்து உண்டான சுனாமியில் 526 பேர் உயிரிழந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.